தனி இதழ்
ஒரு அணா
இலங்கையில் 10 சதம்

மலர் 1] [இதழ் 100

# நம் நாடு

தி.மு.க. தின இதழ் ஆசிரியர். அண்ணாதுரை

THE "NAM NADU" A TAMIL DAILY. THE OFFICIAL ORGAN OF: THE D.P.F

சந்தா விகிதம்:
1 வருடம் ரூ. 24—0—0
6 மாதம் ரூ. 12—0—0
3 மாதம் ரூ. 6—0—0
முன்பணம் செலுத்தவேண்டும்

சென்னை: புரட்டாசி 22உ வியாழன் (8—10—53) ★ ★ ★ வெளியூர்: புரட்டாசி 23உ வெள்ளி (9—10—53)

# புதிய கல்வித் திட்டம் பேராபத்து!

— (:) —

## பிற்பகலில் மாணவர் எண்ணிக்கைக் குறைந்து விடுகிறது

— (:) —

## முன்னர் இருந்த மாணவர் தொகையிலும் குறைவு

### திராவிடர் கல்வி வளர்ச்சிக்கு உலை வைக்கும் ஆச்சாரியார் நோக்கம் வாகைசூடுகிறது

### இரு அய்யங்கார் ஆசிரியர்கள் தரும் தகவல்

"பிற்பகலில் பள்ளிக்கு வரும் மாணவச் சிறார்களின் எண்ணிக்கைக் குறைந்துவிட்டிருக்கிறது. பொதுவாக பதிவு செய்த மாணவர்களின் எண்ணிக்கைக் குறைந்து போயிருக்கிறது."

"தனித் தனியாக மாணவர்களிடம் அக்கரை காட்டுவதற்கு வாய்ப்பு இருந்தபோதிலும், ஒவ்வொரு வகுப்பிலும் மாணவர்கள் தொகை குறைந்துபோயிருப்பதால், ஆசிரியர்களும் அதிக உற்சாகம் குன்றிக் கிடக்கிறார்கள்."

—என். வெங்கடேச அய்யங்கார்.

"பல பள்ளிகளில் புதிய கல்வித் திட்டம் அமுல் நடத்தப்படுகிறது."

"இந்தப் புதிய திட்டத்தைக் குறித்து, ஆசிரியர்கள் கொண்டுள்ள கருத்துக்களில் ஒருமைப்பாடு இல்லை"

"கல்வித் துறையில், அரசியல்வாதிகள் புதிய திட்டங்களைத் தீட்டி விடக்கூடும். ஆனால், ஆசிரியர்களின் ஒத்துழைப்பின்றி, அதனை நடைமுறைக்குக் கொண்டுவர முடியாது."

—ஏ. சீனிவாசராகவ அய்யங்கார்.

குற்றாலம், அக். 6—

திருநெல்வேலி மாவட்ட ஆசிரியர்கள் சங்கம் நேற்றும், இன்றும் கூடி, 'புதிய கல்வித் திட்டம்' பற்றி ஆராய்ந்து இருக்கிறது. இந்த ஆய்வு நிகழ்ச்சிக்கு, தூத்துக்குடி வ. உ. சி. கல்லூரியின் பிரின்சிபாலும், ஆசிரியர் சங்கத்தின் தலைவருமான பேராசிரியர் ஏ சீனிவாசராகவ அய்யங்கார் தலைமை ஏற்றார். இவர் புதிய திட்டத்தை ஆதரித்து ஏற்கனவே தீவிரமாகப் பேசி இருக்கிறார்.

திட்டம் நடைமுறையில் எப்படி இருக்கிறது என்பதைக்கண்ட பிறகு அவருடைய ஆதரவு ஆர்வம் கொஞ்சம் மங்கி இருப்பதாக அவர் பேச்சிலிருந்தே தெரிகிறது.

அதே நிகழ்ச்சியில், ஆசிரியர்களை வரவேற்று உபசாரம்செய்த குலசேகரப் பட்டினம் பி. எஸ். உயர்நிலைப்பள்ளி ஆசிரியர் என். வெங்கடேச அய்யங்கார், புதிய திட்டத்தின் பயங்கர விளைவுகளை விளக்கமாக எடுத்துக் கூறியுள்ளார்.

அம்பாசமுத்திரம் ஆசிரியர் கிருஷ்ணன் என்பவரும், இடையான்குடி உயர்நிலைப்பள்ளி ஆசிரியர் இராஜேந்திரன் என்பவரும், புதிய கல்வித் திட்டத்தை மிக மிக தீவிரமாகக் கண்டித்துப் பேசியுள்ளனர்.

புதிய கல்வித் திட்டத்திற்கு ஆசிரியர்களிடையே எதிர்ப்பு பலமாக இருக்கவே, முடிவெடுப்பதைத் தள்ளிப் போடுவதற்காக, மேலும் இரண்டொரு நாள் திட்டத்தின் மீது விவாதிக்கக் காலம் ஒதுக்க வேண்டுமென்று தலைவர் சீனிவாசராகவ அய்யங்கார் குறிப்பிட்டார்.

### மதுரையில் கைதான தி. மு. கழகத் தோழர்கள்

மதுரை நகர் செயலாளர் எஸ். முத்து, எம். அய்யாச்சாமி, கே. எஸ். ராசமாணிக்கம், அ. தருமர், வேலாயுதம், சீனிவாசன், கு. ரத்தினம், ஏ. எம். பால், மணி, கனகசபாபதி, சந்திரசேகரன், பேச்சிமுத்து, த. முத்தையா, அழகர், சண்முகசுந்தரம், பாக்கியராசன் ஆகியோர்.

## ஆந்திராவில் ரயில் நிறுத்தப் போர்

### ஆர். எம். எஸ். ஊழியர்களின் முடிவு

விஜயவாடா, அக். 2—

ஆந்திர மாநிலத்தில், ரயில்வே-தபால் போக்குவரத்து சர்வீசுக்கு (ஆர் எம். எஸ்) தனிப் பிரிவு ஏற்படுத்த வேண்டுமென்று கோரி, அக். 20-ந் தேதியிலிருந்து, 'தபால்' ஏற்றிச் செல்லும் எல்லா வண்டிகளையும், 55 நிமிடநேரம் தடுத்து நிறுத்த ரயில்வே ஆர் எம். எஸ். ஊழியர்கள் முடிவு செய்துள்ளனர்.

விஜயவாடாவில் நடந்த தபால்-தந்தி ஊழியர்கள் சங்க மாநாட்டுக் கூட்டத்தில் மேற்கண்ட தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

அக்டோபர் 20-ந் தேதியிலிருந்து வேலை நிறுத்தம் செய்யப் போவதாகவும் அவர்கள் முடிவு செய்துள்ளனர்.

## ஆச்சாரியார் 'ஐம்பதாண்டுத் திட்டத்'தின் அலங்கோலம்

### நாட்டுப் புறங்களில் குழந்தைகள் நாசமாகும் வேதனை!

### நேரில் போய் வந்தவர் கண்டதும், கேட்டதும்

அன்புள்ள ஆசிரியருக்கு,

"விடுமுறையின் போது நான் வெளியூர் சென்றிருந்தேன். அங்கிருந்த சில கிராம பள்ளிகளுக்குச் (அழகிய நத்தம், முண்டியம்பாக்கம்) சென்று ஆச்சாரியார் கொணர்ந்தப் புதுக் கல்வித் திட்டத்தைக் குறித்து அவர்களிடமும், மாணவர்களிடமும் வினவினேன்.

அந்த 'அருமையான' திட்டத்தைப் பற்றி திருப்திகரமான பதில் எதுவும் அவர்கள் தரவில்லை. ஒரு பள்ளியில், இத்திட்டத்தின் விளைவாக, முன்பு வந்த 140 மாணவர்களில் பாதி பேர்கள் கூட, தற்போது சரிவர வருவதில்லையாம். காரணம், தங்கள் பெற்றோர்களிடம் காலையில் பள்ளிக்கூடம் என்று சொல்லி விளையாடப் போவதும், சில வேலைகளில் மாலையில் பள்ளி என்று சொல்லி விளையாடப் போவதுமாக ஏமாற்றிவிட்டு, கொஞ்சம் வருகின்ற படிப்பையும், கெடுத்துக் கொள்வதாகத் தெரிவித்தார்கள்.

மற்றொரு கிராமத்தில் இத்திட்டம் நடைமுறைக்கே இன்னும் கொண்டுவரப் படவில்லையாம்; காரணம், அவ்வூர் கிராம மக்கள்—பெற்றோர்கள்—நாள் முழுவதும் முன் போலவே பள்ளிகளை நடத்த வேண்டுமென்று ஆசிரியர்களைத் 'தொல்லை' படுத்துகிறார்களாம். பொதுவில், ஆசிரியர்கள் இதை மனப்பூர்வமாக வெறுப்பதாகவும், வாழ்க்கையை ஓட்டுவதற்கே இதைத் தங்கள் பள்ளிகளில் நடத்துவதாகவும் கூறினார்கள்.

இத்தகு கேவலமான முறையில், ஆச்சாரியாரின் புதிய கண்டுபிடிப்பான 'ஐம்பதாண்டுத் திட்டம்', நடைமுறையில் நடந்து வருகிறது; பணமும் வீணில் பாழாக்கப் படுகிறது. ஜனநாயகத்தின் பேரில் நடக்கும் இந்த எதேச்சாதிகார ஆட்சிக்கு அழிவு

(தொடர்ச்சி 2-ம் கலம் பார்க்க)

# திராவிட இன மக்களை அழித்துவிட 1920-லேயே ஆச்சாரியார் செய்த சதி!

## அவர் வாயினாலேயே இந்த உண்மை வெளியாக முப்பது ஆண்டுகள் ஆயின!

"1920-ம் ஆண்டில், வக்கீல் தொழிலைப் பகிஷ்காரம் செய்யும் இயக்கம் சம்பந்தமாக, நான் அல்லாடி கிருஷ்ணசாமி அய்யரைச் சந்தித்தேன்; அப்பொழுது, நான் கூறியிருந்தால், தனது தொழிலைக் கூட அவர் விட்டிருப்பார்.'

இவ்வாறு ஆச்சாரியார், மயிலாப்பூர் ரானடே ஹாலில் நடைபெற்ற அல்லாடி மறைவு அனுதாபக் கூட்டத்தில் குறிப்பிட்டார்.

மேலும் ஆச்சாரியார் பேசியதாவது:—

"அல்லாடி கிருஷ்ணசாமி அய்யரைப் போல, வேறு யாரையும், நான் நேசித்ததில்லை; அவரும் என்னை அவ்வாறு நேசித்தார்.'

ஆங்கிலேயப் பழக்க வழக்கங்களில் ஊறித் திளைத்த நமது பிரதம மந்திரியும், மற்ற ஆங்கிலேய சட்ட மேதைகளும் புகழக்கூடியவராக தோழர் அல்லாடியிருந்தாரென்றால், அவர் எப்படிப்பட்டவராக இருந்திருக்க வேண்டும்? இந்த லட்சணத்தில், அல்லாடிக்கு உடை உடுத்தத் தெரியாது; பிறரிடம் எப்படிப் பழகுவதென்றும் தெரியாது.

ஆரம்ப காலத்தில் வாரச் சாப்பாடு சாப்பிட்டுக் கொண்டு படித்தவர்; பின்னர் அவருக்குச் செல்வம் வந்தது.

அல்லாடி கஷ்டப்பட்டு முன்னுக்கு வரவில்லை; முன்னேற்றம் அவருக்குத் தானாகவே வந்தது"

கூட்டத்திற்கு முன்னாள் நீதிபதி என். யாதாச்சாரி தலைமை வகித்தார்.

### ஆச்சாரியார் ஐம்ப......

(5-ம் கலத்தின் தொடர்ச்சி)

காலம் என்றோ!" என இராயப்பேட்டை தோழர் அ. சிவராமன் கடிதம் மூலம் அறிவிக்கிறார்.

## ஐதராபாத் சட்டசபையைக் காலம் குறிப்பிடாமல் ராஜப் பிரமுகர் தள்ளி வைத்தார்

### காங். சட்டசபை உறுப்பினர்களுக்குள் ஏற்பட்ட பிளவே இதற்குக் காரணம்

ஐதராபாத், அக். 7—

ஐதராபாத் குடிவார விவசாய திருத்த மசோதா காரணமாகவும், காங்கிரஸ் மந்திரிகளின்மீது சொந்தக் கட்சி சட்டசபை உறுப்பினர்கள் பலர் சாட்டியுள்ள ஒழுக்கக்கேடு குற்றச்சாட்டின் காரணமாகவும் ஏற்பட்டுள்ள பிளவினால், சட்டசபையையே கலைத்து விடுவதற்குப் பதிலாக காலங் குறிப்பிடாமல், ராஜப் பிரமுகர், சட்டசபையைத் தள்ளிப் போட்டுவிட்டார்.

**ஐவர் சிறையில்!**

இன்று

**38—வது நாள்**


# நம் நாடு

தி.மு.க.தினஇதழ் ஆசிரியர்: அண்ணாதுரை

சென்னை : 8—10—1953 வியாழன்


# சாணக்கியர்!

**(4)**

காங்கிரஸ் ஊழியர்கள், ஒரு காலத்தில், பிரதிபலனைக் கருதாமல், நாட்டுப் பணி புரிந்திருக்கிறார்கள்; கஷ்ட நஷ்டங்கள் ஏற்றிருக்கிறார்கள்; நாணயமாக, தினப்படி கை பாடுபட்டு, ஏதோ உயிர்வைத்திருந்த சில பலர்கூட, நாட்டுப் பற்றின் காரணமாக, விடுதலைப் போராட்டத்தில், லாப நஷ்டக் கணக்குப் பார்க்காமல் திடுதிப்பென்று குதித்தார்கள்; இன்னல் பல ஏற்றார்கள்; தியாக முத்திரையைப் பெற்றார்கள்.

புகழ்ச்சிக்காக அல்ல, இத்தகையவர்கள், நாட்டுச் சேவையில் இரண்டறக் கலந்தது! பின்னால் வரவிருக்கும் பதவி-பட்டம்-பணம்-பளபளப்பான வாழ்வு—ஆகிய பெரும் பேற்றுக்கு, இப்போழுது போடப்படும் முதலீடு - தியாகம் என்பதை இந்த ஊழியர்கள் கனவிலும் கருதாதவர்கள்; கள்ளம் கபடமற்ற வெள்ளை உள்ளம் பெற்ற இயல்பினர்; மாசு மருவற்ற மனத்தினர். தியாகத்தை, தூண்டிலில் சொருகும் பூச்சி புழுகு என்று கொண்டிருக்கும் 'மாபெரும் தலைவர்கள், இனத்திற்கும், சொந்த நலனைத் திரணமாக மதித்து, பொது வாழ்வில் புகுந்து அல்லல் பட்டு அவதியுறும் இந்த 'ஊழியர்' இனத்திற்கும், வட மையத்திற்கும் தென் மையத்திற்கும் உள்ள தூரம் உண்டு.

இவர்கள் உழைப்பால், இவர்கள் செலுத்திய ரத்தக் காணிக்கையால், எலும்புக் குவியல் படையலால், ஏகாதிபத்திய பலிபீடத்தில் இதயபூர்வமாக அளித்த உயிர் பலியால், அதிகாரம்—அந்தஸ்து—ஆடம்பர வாழ்வு—மற்ற எல்லா சுகபோகங்களும் பெற்றுள்ளவர்கள், ஆச்சாரியாரை ஒத்த தலைவர்கள் என்பதை எவரும் மறக்க முடியாது. இந்த உண்மையை ஊழியர்களும் மறந்துவிடக்கூடாது.

அன்று, ஒரு நாள், அனைவரும் பாடுபட்டத் தலைவர்கள்; எலும்புருக் கொண்டவர்கள், ஏகாதிபத்திய அடக்குமுறைகளுக்கு ஆளாகி வாழ்வில் வளங்குன்றிக் கிடந்தவர்கள். இந்நிலை, அன்று, எல்லோருக்கும் இருந்துவந்த 'பொது நிலை' யாக இருந்து வந்தது.

ஆனால், இன்றோ? நேர் மாற்றம்.

சிலர் அதிகாரத்தில்; வேறு சிலர் உயர்ந்த உத்தியோகத்தில்; மற்றும் சிலர் சிறந்த பதவிகளில்; இன்னும் சிலர் பணம் குவிக்கும் பணியில்; பெரும்பாலான ஊழியர்களோ நடுத்தெருவில்; வாழ வழி தெரியாது, கலங்கிய கண்களுடனும், சிந்திய மூக்குடனும், வெளிறிய முகத்துடனும், தளர் நடையுடனும், வீதி ஓரங்களில!

அன்றும் ஊழியர்கள் அல்லல் பட்டார்கள்; இன்றும் ஊழியர்கள் இடுக்கண்களில் இருக்கிறார்கள்.

முன்னையது நாட்டுச் சேவையினால் கிடைத்த தியாக வாழ்வு; பின்னையது தலைவர்களின் துரோகத்தால் சம்பவித்த சஞ்சல வாழ்வு.

முன்னையது கண்ணியம் நிறைந்தது; பின்னையது இழிவு மலிந்தது.

முன்னையது வெறுப்பினால் வெள்ளையன், ஊழியர்கள்மேல் பலவந்தமாகத் திணித்தது; பின்னையது வேண்டுமென்றே அலட்சியப்படுத்தி ஆச்சாரியாரை நிகர்த்தவர்கள், ஊழியர்கள் மேல் துரோக சிந்தனையோடு புகுத்தியது.

தலைவர்கள் உண்பார்—உடுப்பார்; தொண்டர் பசித்த வயிறுடனும் நிர்வாணகோலத்துடனும் காலங் கழிக்க வேண்டும். இதுவுமல்லாமல், தலைவர்கள் உண்டால் தாங்களும் பசியாறிவிட்டதாகத் தொண்டர்கள் தீர்மானித்துக்கொண்டு மகிழ்ச்சிபெற வேண்டும். தலைவர்களின் ஆடை அலங்காரங் கண்டு, நிர்வாணகோலம் தங்களை விட்டுப் பறந்தோடிவிட்டதாகக் கற்பனை செய்துகொண்டு காலங் கடத்த வேண்டும்.

தலைவர்கள் தலையில் உள்ள தைலத்தின் வாசனை மணக்கும்—தொண்டர்கள் தலையிலே ஈரும், பேனும் சஞ்சரிக்கும், இருந்தாலும், தலைவர்கள் தலையைப்போல் தங்கள் தலையும் நறுமணத்தை காற்றில் மிதக்கவிடுவதாக நினைத்துக்கொள்ள வேண்டும் தொண்டர்கள்.

அருமையான உபதேசம், புடம் போட்டப் பத்தரைமாத்துப் பொன்மொழிகள், ஆச்சாரியார் காங்கிரஸ் ஊழியர்களுக்குத் திருவாய் மலர்ந்தருளியுள்ளது.

இந்த அருமையான உபதேசம் ஆச்சாரியார் அறிவிலே பூத்தப் புது மலர் என்று ஊழியர்களும் எண்ணிவிடக்கூடாது; பொதுமக்களும் தீர்மானித்துவிடக் கூடாது.

இது தான் கீதை—கண்ணன் காட்டிய வழி, குருக்ஷேத்திரத்தில், பந்துமித்திரரைக் கொல்ல ஒருப்படாது சோர்ந்து மயக்கத்தைத் தெளிவிக்க அவதார புருஷனும் கிருஷ்ணன் கூறிய கருத்துரை இதுதான்.

'கடமையைச் செய்; பலனை எதிர்பாராதே'

கீதையின் வாசகம் இது. பாசீச வெறிச் செயல்களுக்கெல்லாம், இந்த நச்சுக் கொள்கை—தத்துவம்தான் கடைக்கால். இதன் அஸ்திவாரத்தின்மீது ஆரியம் எழுந்தது. சனாதனம் இன்றும் செங்கோலோச்சிக் கொண்டு இருப்பது. ஆலகால விஷம்போன்றது! மனித குலம், தன்னைத்தானே மனம் ஒப்பி மதோன்மத்தர்களின் பாதாரவிந்தங்களில் நிரந்தரமாக விழுந்து கிடக்கச் செய்யும், மக்கள் அறிவு வளர்ச்சியை மாய்க்கும் மகா விஷப் பண்பு கொண்டது!

'தொண்டிற்கு பிரதிபலன் வேண்டுமென்று ஆசைப்பட்டால் மதிப்பு குறைந்துவிடும்; கேட்டாலும் மதிப்பு குறைந்துவிடும். பிரதிபலனைப் பெற்ற பிற்பாடு மதிப்பே கொஞ்சம்கூட இருக்காது இதுதான் உண்மை."

ஆச்சாரியார் திருவாக்கு இது. மதிப்பு என்னும் சொல் தரும் உற்சாகத்தை ஊழியர்களுக்கு ஊட்டி, ஊழியர்களின் பசியைத் தணிக்கப் பார்க்கிறார் ஆச்சாரியார். கேலிக்கூத்து.

ஆண்டவனுக்கும், உலகுக்கும், உயிருக்கும் உள்ளத் தொடர்பு பற்றி பேசிக்கொண்டு இருக்கும் இன்றுள்ள சங்கராச்சாரியார், நூற்றுக்கணக்கில் வெள்ளைப் பணங்களை பாத காணிக்கையாகப் பெறுகிறார், அவருடைய 'மதிப்பு' மங்கியா போய்விட்டது?

தம்பிரான்கள், ஆயிரம் ஆயிரம் வேலிச் சொந்தக்காரர்களாக இருக்கிறார்களே, அந்த மாமிச மலைகளுக்கு இருந்து வந்த 'மதிப்பு' கல்லறையிலா புதையுண்டு போய்விட்டது?

ஆச்சாரியார் மாதா மாதம் சம்பளம் வாங்குகிறார், வீட்டு வாடகைப் படி வாங்குகிறார், சுற்றுப்பிரயாணப் படி பெறுகிறார், அவர் சொல்படி, ஆச்சாரியாருக்கு 'மதிப்பு'ப் போய்விட்டதா? 'மதிப்பு'க் கெட்டவரை ஊழியர்கள் மதிப்பார்களா? மதிக்கிறார்களே, அது அல்லவோ வேடிக்கை!

கவர்னர் பெருமான் ஆயிரக்கணக்கில் சம்பளம் வாங்குகிறார்—அவருக்கு மதிப்பு இல்லாமலா போய்விட்டது?

ஆலை அரசர் பிர்லா, ஆலைத்தொழிலாளர்கள் ரத்தத்தைப் பணமாக மாற்றி, ஆண்டு ஒன்றுக்குக் கோடிக்கணக்கில் குவிக்கிறார்,—அவருக்கு 'மதிப்பு' இல்லாமலா போய்விட்டது? அந்தக் காலத்திலே, பிர்லா, காந்தியாரின் தவப்புதல்வராக இருக்கும் அளவிற்கல்லவா 'மதிப்பு'ப் பெற்றிருந்தார்? அக்காலக் காங்கிரசுக்கு அவர் 'காமதேனு'வாக அல்லவா காட்சி அளித்துவந்தார்? எவ்வளவு 'மதிப்பு' அவருக்கு?

சம்பளம் வாங்கும் அரசாங்க ஊழியர்களுக்கு 'மதிப்பு' இல்லை என்கிறார்!

மாதச் சம்பளம் வாங்குவதால் போலீஸ்காரர்களுக்குப் பொது மக்களிடம் 'மதிப்பு' இல்லை என்கிறார்!

வெறும் புரட்டு! உதவாக்கரை தத்துவம்! ஊரை ஏமாற்றவே, உண்மையை பொதுமக்கள் கண்ணிலும் கருத்திலும் இருந்து மறைக்கவே, ஊழியர்களுக்குப் பட்டை நாமம் சாத்தவே 'மதிப்பு' என்று அர்த்தமற்றச் சொல்லைப் போட்டு, விஷயத்துக்குத் துளியும் தொடர்பு இல்லாத தமிழ் பதப்பதத்தை வீசி, ஊழியர்களின் கொதிப்பை அடக்கப் பார்க்கிறார் சாணக்கியர்! தொண்டர்களின் கொந்தளிப்பைக் குறைக்கப் பார்க்கிறார் குல்லுக பட்டர்!

இந்த 'மதிப்பு' என்னும் பதத்தைக் காட்டி ஊழியர்களை மடக்கி, அவர்களுடைய கிளர்ச்சியை, கோரிக்கையை சில காலைக்குத் தள்ளிப்போடுவதில் சித்திரபுத்திரர் வெற்றி பெறலாம்.

'பசி' என்னும் இரு எழுத்துத் தமிழ்ப் பதம், ஆச்சாரியார் கூறும் 'மதிப்பு' என்னும் பதத்தைக் காட்டிலும், வன்மையுள்ளது—தாக்கும் திறன்மிக்கது!

அதன் தாக்குதலை நமது கோயில்களிலே உள்ள கற்சிலைகளாலும் தாங்க முடியவில்லை. அர்ச்சகர்களும், அது கொடுக்கும் அடிக்கு முன்னால் அடிபணிந்து விடுகிறார்கள். தேவாரம், திருவாசகம் பாடிய நால்வர், பிரபந்தம் பன்னிரண்டு ஆழ்வார்கள், சங்கரர், மாத்துவர், ராமானுஜர், புத்தர், இயேசு, நபி நாயகம், அனைவரும் 'மதிப்பு' என்னும் புகழின் உச்சத்தில் ஏறினவர்கள்தான். இருந்தாலும், இந்த உயர்ந்தவர்களாலும், 'பசி'யின் தாக்குதலை எதிர்த்து நிற்க முடியவில்லை என்பது உண்மை அல்லவா?

இவர்களால் முடியாததை, காங்கிரஸ் ஊழியர்கள் தாங்கி வெற்றி பெறவேண்டுமென்று சாணக்கியர் விரும்புவது நீதியா? நேர்மையா? ஊழியர்களே, நம் உடன்பிறந்தவர்கள், ஓர் உதிரத்து உருவான உத்தமர்கள், ஆராய்ந்து பார்க்க வேண்டும். இதுவே நமது விருப்பம்.

'கல்லைத்தான் மண்ணைத்தான் காய்ச்சித்தான் குடிக்கத்தான் கற்பித்தானா' என்று புலவன் 'பசி'யின் பலத்த தாக்குதலுக்கு ஆளாகி, வயிறெரிந்து பாடியுள்ளது மண்ணோடு மண்ணாகவா போய்விட்டது?

'பசி வந்திடப் பத்தும் பறந்து போம்' என்றானே, ஒரு புலவன், அந்தத் தமிழ்ப் பாவை, கடலா கொண்டுபோய் விட்டது?

மனிதன் உயிரோடு வாழ்ந்தாக வேண்டும். இதுதான் அடிப்படை. எல்லா வற்றிலும் முக்கியம்.

உயிர் இருக்கும் மனிதனுக்குத் தான் 'மதிப்பு' தேவை! செத்த பிணத்திற்கல்ல! அதற்குப் 'பசி'யுமில்லை! 'மதிப்பு'ம் அவசியமில்லை.

ஆச்சாரியார் பொதுமக்களால் மனம் நொந்து, கொட்டி அழும வரிப் பணத்திலிருந்து; மாதச் சம்பளம் பெறுகிறாரே அதனால் போகாத 'மதிப்பு', காங்கிரஸ் கட்சிக்கு உண்டாகாத கேடு, பாடுபட்ட ஊழியர்கள், உயிரை ஒரு கையால் பற்றிக்கொண்டு, தலைவர்களை மற்றொரு கையால் தூக்கிப் பிடித்துக்கொண்டு இருக்கும் ஊழியர்கள் 'பசி'—வழி செய்யும்!' என்று கேட்பதாலே, 'மதிப்பு'ப் போய்விடும்—கெட்டுவிடும்—காங்கிரசுக்குக்களங்கமா ஏற்பட்டுவிடும்? ஊழியர்கள் ஊழியத்துக்குக் 'கூலி' கேட்கவில்லை என்பதை முதல் முதலாக நாம் உணர வேண்டும். அவர்கள் கேட்பது, நாட்டு மக்களுக்கு நல்வாழ்வு. நாட்டு மக்களிலே, 'அவர்களும்' உள்ளனர். நாட்டு மக்களின் கோரிக்கையை, தங்கள் கோரிக்கை மூலம் பிரதிபலிக்கிறார்கள் காங்கிரஸ் ஊழியர்கள்.

இந்தப் பேருண்மையை, காங்கிரஸ் ஊழியர்கள் அறிந்திருந்தாலும் இருக்கலாம்; அறியாமல் இருந்தாலும் இருக்கலாம். அவர்களுடைய கோரிக்கையில் அடங்கியிருக்கும் உட்பொருள் அதுதான்.

ஊழியர்களின் கோரிக்கையில் மறைந்து கிடக்கும் உண்மையை, சிறந்த கோட்பாட்டை ஆச்சாரியார் அறியார். அவர் சாணக்கியர்—குல்லுகர்—கண்ணன் காட்டிய வழி ஆசிரியர். அவருடைய அறிவின் தரத்தை, நாம், நன்கு அறிந்து கொண்டால்தான், அவருடைய அதிகார கோரவிளையாட்டால் நாட்டு மக்களுக்கு ஏற்படும் அனர்த்தங்களை முழுதாகத் தெரிந்து கொள்ள முடியும். அவரைத் தெரிந்து கொள்ளுவது அவருடைய அக்கிரமங்களுக்கெல்லாம் திறவுகோலாக இருப்பது.

ஊழியர்களின் சாதாரண கோரிக்கைகளை, 'மதிப்புக் கேடு' என்று கூறி, மக்களின் கோரிக்கைகளைத் தட்டிக்கழிக்கப் பார்க்கிறார் ஆச்சாரியார். ஊழியர்கள் கூட்டத்திலே பேசுகிற அதே தோரணையில்தான், பொதுக்கூட்டங்களிலும், ஆச்சாரியார் 'கடமை' வற்புறுத்தி வருகிறார். இரண்டுக்கும் ஒரே அடிப்படைதான். நிற்க,

ஊழியர்கள் கேட்பது, மாடி வீடு அல்ல, வேகமாகச் செல்லும் வாகனம் அல்ல, இதுவரை எவருக்கும் கிட்டாத இகசுகம் அல்ல, கேட்பது 'பசி' போக்கிக் கொள்ள வழி வகை! பிச்சை அல்ல—முக்காலும் அல்ல. நாணயமாகத் தொழில் செய்ய மார்க்கம்—ஒரு பேது!

ஆச்சாரியார் இந்த நியாயமான கோரிக்கையைக் களங்கப்படுத்தி, 'ஊழியத்திற்குக் கூலி கேட்காதீர்கள்' என்றும், அதில் 'மதிப்பு' இல்லை என்றும், உண்மையை மறைத்தும் திரித்தும் பொதுமக்களிடம் காங்கிரஸ் ஊழியர்களைக் காட்டிக் கொடுக்கிறார். மற்றவை நாளை.

---

### பற்கள் பறிபோகுமா?

நியூயார்க், அக். 6—

மனிதர்களுக்கு,முன்பெல்லாம் 40 பற்கள் இருந்தது; இப்போது 32 ஆகக் குறைந்துவிட்டது; அடுத்து, பல இலட்ச ஆண்டுகள் கழித்து, 20 பற்களாகக் குறைந்து விடலாம் என்று ஆராய்ச்சி நிபுணர்கள் கூறுகின்றனர்.

---

### தர்மசங்கடம்!

கோலாலம்பூர், அக். 6—

மலேயாவில், ஆசிரியர்கள், உபாத்தியாயினிகளுக்கு காதல் கடிதங்கள் எழுதலாமா, காதலிக்கலாமா?—மாணவர்களுக்கு, ஒழுங்கைக் கற்பிக்கும் அவர்கள், ஒழுங்காக இருக்க வேண்டாமா என்ற பிரச்னை இப்போது எழுப்பப்பட்டுள்ளதாம்!

---

### மலேரியாவை ஒழிக்க......

லண்டன், அக். 6—

மலேரியா ஜுரத்தை பரப்பும் கொசுக்களை ஒழிக்க வேண்டுமானால் நிழல் தரும் மரங்களை வெட்டி வீழ்த்த வேண்டும் என்று, மலேரியா ஆராய்ச்சியா

# கல்லக்குடி அறப்போராட்ட வழக்கு விசாரணை

★

திருச்சி, அக். 5—

தோழர்கள் தம்புசாமி, தர்மலிங்கம், கண்ணதாசன், ஐ. எம். ஷெரீப் உள்ளிட்ட தோழர்கள் மீது தொடரப்பட்ட கல்லக்குடி அறப்போராட்ட வழக்கு, செப். 28-ம் தேதி, திருச்சி சப்-டிவிஷனல் மாஜிஸ்திரேட் கோர்ட்டில், திரு. கே. பி. ராதாகிருஷ்ண மேனன் முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது அன்றைய விசாரணையில் சர்க்கார் சாட்சிகளில் மேலும் நால்வர் விசாரிக்கப்பட்டனர்.

திருச்சி, செப். 29—

அரசாங்கத் தரப்பில் 23-வது சாட்சியாக, திருச்சி தலைமை வைத்தியசாலையின் வைத்திய அதிகாரி டாக்டர் பழனிசாமி விசாரிக்கப்பட்டார். அவர் அளித்த சாட்சியம் வருமாறு:—

"கடந்த ஜூலை மாதம் 15-ந் தேதியன்று, மாலை சுமார் 6-30 மணிக்கு, ராஜூ என்கிற செபஸ்தியன் என்பவரை (17-வது எதிரி) நான் பரிசோதனை செய்து பார்க்கையில், அவர் துப்பாக்கிக் குண்டு காயங்கள் பட்டிருந்தார் என்பதை அறிந்தேன். அவருக்குப் பலத்த காயம் ஏற்பட்டிருந்தது. அவரின் ஆசனத் துவாரமும், ஆண் குறியும் பெரிதும் பாதிக்கப்பட்டிருந்தன."

சாட்சி, பின்னர் குறுக்கு விசாரணை செய்யப்படுகையில், காயம் ஒரே குண்டினால் ஏற்பட்டிருக்க வேண்டும் என்று கூறினார்.

அடுத்தபடியாக ரிஸர்வ் ஹெட் கான்ஸ்டேபிள் ரங்கசாமி என்பவர், சாட்சியம் அளித்தார் அவர் கூறியதாவது:—

"கடந்த ஜூலை மாதம் 15-ந் தேதியன்று கல்லக்குடியில் பக்தோபஸ்திலிருந்த 44 ரிஸர்வ் போலீஸாரில் நான் ஒருவன். பகல் சுமார் 1 மணிக்கு பிளாட்பாரத்தில் சுமார் 100 பேர் இருந்தனர். 1-50 மணிக்கு அரியலூர் பாஸஞ்சர் வண்டி அரியலூர் பக்கத்திலிருந்து பிளாட்பாரத்தை வந்தடைந்தது. சுமார் 10 அல்லது 15 பேர்கள் தண்டவாளங்களின் மீது படுக்க முயன்றார்கள். உடனே டிப்டி கலெக்டர் அவர்களைத் தண்டவாளத்தை விட்டு விலகிச் செல்லுமாறு கேட்டுக்கொண்டு, அவர்கள் செய்வது சட்ட விரோதம் என்று குறிப்பிட்டார் அவர்கள் தண்டவாளத்தை விட்டு விலகிச் செல்லாததால் தடியடிப் பிரயோகம் செய்யும்படி உத்திரவிடப்பட்டது. தடியடிப் பிரயோகம் செய்தவர்களில் நானும் ஒருவன். உடனே கூட்டம் கலைந்தது. ஆனால் கல்வீச்சு இருந்தது. ஒரு கல், என்ஜின் டிரைவரையும் தாக்கியது. சில நிமிடங்களுக்கெல்லாம் வண்டி புறப்பட்டது. வண்டி சுமார் 300 அடி தூரம் சென்றவுடன் நின்றது. அங்கே சுமார் 600 பேர் ரயில் பாதையில் உட்கார்ந்திருந்தனர். டிப்டி கலெக்டரின் உத்திரவின் பேரில் நான் கூட்டத்தினரைக் கலைந்து போகும்படி எச்சரிக்கை செய்தேன். கூட்டத்தினர் கலைந்து போகாததால், மீண்டும் தடியடிப் பிரயோகம் செய்யப்பட்டது. போலீசார் மீது கற்கள் மழை பொழிவது போல் வீசப்பட்டன. நானும், சில அதிகாரிகளும் சில கான்ஸ்டேபிள்களும் அதனால் காயமுற்றோம்.

கல்வீச்சு மேன்மேலும் அதிகரித்துக் கொண்டு போகவே, கான்ஸ்டபிள்கள் அனைவரும் துப்பாக்கிப் பிரயோகம் செய்யும் படையினருக்குப் பின்னால் வந்துவிடும்படி கேட்டுக் கொள்ளப்பட்டனர். பிறகு 'துப்பாக்கிப் பிரயோகம் செய்யப்படும்' என்ற எச்சரிக்கைப் பலகை கூட்டத்தினருக்குக் காட்டப்பட்டது. ஆனால் கூட்டத்தினர் கலைந்து போக மறுத்தமையால் துப்பாக்கிப் படையினருள் இரண்டு பகுதியினரால் துப்பாக்கிப் பிரயோகம் செய்யப்பட்டது.

பிறகு கூட்டம் கலைந்தது. அதன் பிறகு வண்டியும் புறப்பட்டது.

துப்பாக்கிப் பிரயோகத்தால் ஒருவர் பலத்த காயத்தோடு கீழே விழுந்தார் அவர் தூக்கிச் செல்லப்பட்டு லோக்கல் போலீசாரிடம் ஒப்படைக்கப்பட்டார்."

பிறகு சாட்சி தாம் தடியடிப் பிரயோகம் செய்தபோது கண்டதாக இரண்டு எதிரிகளை அடையாளம் காட்டினார்.

பிறகு சாட்சி, குறுக்கு விசாரணை செய்யப்படுகையில் கூறியதாவது:—

"புலன் விசாரணை செய்த அதிகாரியிடம் நான் இப்போது என்னால் அடையாளம் காட்டப்பட்டவர்களைப் பற்றிச் சொல்லவில்லை. அவர்கள் காயமுற்றவர்களா இல்லையா என்பது எனக்குத் தெரியாது. எதிரிகளால் துப்பாக்கிக் குண்டு காயம் பட்டவர்கள் இருக்கின்றனரா என்பதும் எனக்குத் தெரியாது தண்டவாளங்களின் மீது எத்தனை பேர் படுத்துக்கொண்டிருந்தனர் என்பதையும், எத்தனை பேர் உட்கார்ந்துகொண்டிருந்தனர் என்பதையும் என்னால் சொல்ல முடியாது. அங்கே சுமார் 4000 பேர்கள் குழுமியிருந்தனர்.

தடியடிப் பிரயோகம் செய்யப்படு முன்பே கற்கள் வீசப்பட்டன. கற்கள் எல்லாப் பக்கங்களிலிருந்தும் வந்தன. கூட்டத்தில் திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவர்கள் எவ்வளவு பேர் இருந்தனர் என்பதையும், கழகத்தைச் சேராத பொதுமக்கள் எத்தனை பேர் இருந்தனர் என்பதையும் என்னால் தெளிவாகச் சொல்ல முடியாது. ரயில் பாதையில் படுத்திருந்தவர்கள் ஏன் கைது செய்யப்படவில்லை என்பது எனக்குத் தெரியாது."

இச்சமயத்தில் நீதிபதி குறுக்கிட்டு, "அவர்கள் ஏன் கைது செய்யப்படவில்லை என்று நீ கூற முடியுமா?" என்று கேட்டார்.

உடனே சாட்சி, "அது அதிகாரிகளின் வேலை; எனக்குத் தெரியாது" என்று பதில் கூறினார்.

சாட்சி மேலும் குறுக்கு விசாரணை செய்யப்படுகையில், துப்பாக்கிப் பிரயோகத்தின்போது, பிளாட்பாரத்தில் சுமார் 300 பேர்கள் இருந்தனர் என்றும், என்ஜின் டிரைவர் கல்லடி பட்டார் என்று மாத்திரம்தான் தம்மால் கூற முடியும் என்றும், அதும் யாரால் அடிக்கப்பட்டார் என்று தம்மால் கூற இயலாது என்றும் கூறினார்.

அடுத்து கருப்பன் என்ற ரிஸர்வ் ஹெட்கான்ஸ்டேபிள் விசாரிக்கப்பட்டார். அவர் ஹெட்கான்ஸ்டேபிள் இரங்கசாமி கூறிய மாதிரியே சாட்சியம் கூறினார்.

அவர் மேலும் சாட்சியம் கூறுகையில் குறிப்பிட்டதாவது:—

"புகைவண்டி நிலையத்திற்குள் இருந்தவர்கள் தங்களிடம் எவ்வித அடையாளமோ அல்லது பேட்ஜோ கொண்டில்லை. தடியடிப் பிரயோகம் செய்தவர்களில் நானும் ஒருவன். கற்கள் வீசப்பட்டபோது என் உதட்டிலும் ஒரு கல் பட்டுக் காயத்தை யுண்டாக்கியது."

பிறகு சாட்சி, 11-வது எதிரியையும், 17-வது எதிரியையும் அடையாளம் காட்டினார்.

சாட்சி குறுக்கு விசாரணை செய்யப்படுகையில், கற்கள் பெருமபாலும் தெற்குத் திசையிலிருந்துதான் வந்தன என்றும், கூட்டத்தில் சுமார் 4000 பேர்கள் இருந்தனர் என்றும், ரயில் பாதையில் உட்கார்ந்திருந்த சுமார் 40 அல்லது 50 பேர்களும் கைது செய்யப்படவில்லை என்றும் கூறினார்.

அடுத்தபடியாக ஆரோக்கியசாமி என்ற ரிசர்வ் கான்ஸ்டேபிள் விசாரிக்கப்பட்டார். இந்தச் சாட்சியும் முன்னால் கூறிய இரண்டு ஹெட் கான்ஸ்டேபிள்களைப் போலவே விளக்கமாகக் கூறித் தாமும் தடியடிப் பிரயோகம் செய்தவர்களில் ஒருவர் என்று கூறினார்.

தமக்கு வலது கையில் ஒரு கல்லடி வீழ்ந்ததாகவும், கூட்டத்தில் தாம் கண்டவர்கள், நீதி மன்றத்தில் எதிரிகளாக நிறுத்தப்பட்டுள்ளவர்களில் இருக்கின்றனரா என்று தம்மால் சொல்ல முடியாதென்றும் கூறினார்.

சாட்சி குறுக்கு விசாரணை செய்யப்படுகையில், "தடியடிப் படையினருள் 30 ரிசர்வ் போலீசாரும், துப்பாக்கிப் பிரயோகப் படையில் 10 ரிசர்வ் போலீசாரும் இருந்தனர்; கல் வீச்சினால் காயம்பட்ட 7 அல்லது 8 ரிசர்வ் போலீசாரும் தடியடிப் பிரயோகப் படையைச் சேர்ந்தவர்கள்; புகை வண்டியின் முதலிரண்டு பெட்டிகளுக்குப் பக்கத்தில் தடியடிப் பிரயோகம் நடைபெறவில்லை" என்று கூறினார்.

இந்தச் சாட்சி விசாரணையோடு வழக்கு அடுத்த நாளைக்கு ஒத்தி வைக்கப்பட்டது.

★

திருச்சி, செப். 29—

இன்று மேலும் மூன்று சாட்சிகள் விசாரிக்கப்பட்டனர். முதலாவதாகக் கரூர் மெடிகல் அதிகாரி டாக்டர் கே. சுப்ரமணியம் என்பவர் 27-வது சாட்சியாக விசாரிக்கப்படுகையில், கூறியதாவது:—

"சப்-இன்ஸ்பெக்டர் கோட்டுக் கொண்டதின் பேரில் 22-வது எதிரியாகிய கருமலை என்பவரை நான் சோதனை செய்து பார்த்தேன். அவருடைய மூக்குக்குப் பக்கத்தில் ஒரு சிறு காயம் தடியடிப் பிரயோகத்தால் ஏற்பட்டிருக்க வேண்டும்."

பிறகு, டாக்டர் சர்டிபிகேட் கோர்ட்டில் தாக்கல் செய்யப்பட்டது

எதிரிகளின் வக்கீல் தோழர் வாசுதேவ ஆனந்தர் சாட்சியைக் குறுக்கு விசாரணை செய்கையில், சர்டிபிகேட்டில் காயம் ஏற்பட்ட நேரத்தைத் தாம் குறிப்பிடவில்லை என்று குறிப்பிட்டார்.

அடுத்தபடியாக லால்குடி புகைவண்டி நிலைய உதவி ஸ்டேஷன் மாஸ்டர் தோழர் எம். ராஜாராம் 28-வது சாட்சியாக விசாரிக்கப்படுகையில் கூறியதாவது:—

"நான் கடந்த ஜூலை மாதம் 15-ந் தேதியன்று ரயில்வே ஸ்டேஷனில் பகல் 12 மணியிலிருந்து இரவு 8 மணி வரையில் வேலை பார்த்து வந்தேன். பிற்பகல் 2-30 மணிக்கு விழுப்புரம் கண்ட்ரோல் ஆபீசிலிருந்து நோயாளிகளை எடுத்துச் செல்லும் 'ஸ்ட்ரெச்சரை'யும், காயமுற்றவர்களை வண்டியிலிருந்து இறக்குவதற்கு வேண்டிய வசதிகளையும் தயாராக வைத்திருக்குமாறு உத்திரவு வந்தது. அதன்படி ஸ்டேஷனிலிருக்கும் 'ஸ்ட்ரெச்சரை'யும், சில வண்டிகளையும் தயாராக வைத்திருந்தேன். பிற்பகல் 2-54-க்கு அரியலூர் பிரயாணிகள் வண்டி ஸ்டேஷனை அடைந்தது. அப்போது புகை வண்டி நிலையத்தில் ஒரு பெரிய கூட்டம் இருந்தது. அந்த நேரம் இரண்டு வண்டிகள் ஸ்டேஷனில் ஒன்றையொன்று கடக்கும் நேரம். ஆகையால் வேறோர் வண்டியும் ஸ்டேஷனில் இருந்தது. வண்டியிலிருந்து இறங்கியவர்களில் சிலர் வண்டிக்குள் ஒரு பிரேதம் இருப்பதாகவும், காயம் பட்ட சிலரும் இருப்பதாகவும் கூக்குரலிட்டனர். காயம்பட்டவர்கள் நால்வர் வண்டியிலிருந்து தாங்களாகவே இறங்கினர். பலமாகக் காயமுற்ற ஒருவரை 'ஸ்ட்ரெச்சர்' வாயிலாக வண்டியிலிருந்து இறக்கினேன். காயம் பெற்றவர்களோடு இறங்கிய சிலர், புகை வண்டி நிலையத்தில் வைக்கப்பட்டிருக்கும் "புகார் எழுதும் புத்தகத்தை"க் கொடுக்குமாறு கேட்டனர் அப்புத்தகம் அவர்கட்குக் கொடுக்கப்பட்டது.

23-வது எதிரியாகிய தோழர் ஏ. பி. தருமலிங்கம் என்பவர் அப்புத்தகத்தில் காயம்பட்டவர்களின் பெயர்களையும், முகவரிகளையும் எழுதினார்.

"பிரேதம் இருந்த பெட்டியை (கேரேஜ்) நேராக திருச்சி ஜங்ஷனுக்குப் போகவிடவேண்டும் அல்லது, பிரேதத்தை இறக்கிய பிறகு அப்பெட்டி அங்கேயே நிறுத்தி வைக்கப்பட வேண்டும், என்று கூட்டத்தினர் கோரினர். ஆனால் கண்ட்ரோல் ஆபீசிலிருந்து அப்பெட்டியை நிறுத்தி வைக்க எனக்கு அனுமதியில்லை.

எப்படியோ கூட்டத்தினரைக் கலைந்து போகும்படி செய்து பிரேதத்தை இறக்கினேன். அப்பிரேதம் இருந்த பெட்டி சீல் வைக்கப்பட்டுப் பூட்டப்பட்டது. பிறகு வண்டி மாலை 4 மணிக்கு ஸ்டேஷனை விட்டுப் புறப்பட்டது. காயமுற்ற 5 பேரும் போலீஸாரிடம் ஒப்படைக்கப்பட்டனர்."

உதவி பப்ளிக் பிராசிகியூட்டர் தோழர் மகாதேவ சாஸ்திரி கேட்ட கேள்விகளுக்குச் சாட்சி பதிலளிக்கையில். கூறியதாவது:

"காயம் பட்டவர்கள் சிகிச்சைக்காக வைத்தியசாலைக்கு அனுப்பப்பட்டனர். ஸ்டேஷனில் இருக்கும் 'புகார் புத்தகம்' இந்தச் சம்பவம் பற்றி விசாரணை செய்த விசாரணைக் கமிட்டியிடம் சமர்ப்பிக்கப்பட்டது புகார் புத்தகத்தைக் கொடுக்குமாறு கோரியவர்களை என்னால் அடையாளம் காட்ட இயலாது. புத்தகத்தில் குறிப்பிடப்பட்டுள்ள பெயர்களில் நடராசன், கேசவன் என்ற இரண்டு பெயர்கள் எனக்கு நினைவில் உள்ளன."

மற்றுமொரு கேள்விக்கு பதிலளிக்கையில், ஒருவர் இறந்தாரென்றும், ஒருவர் படுகாயமுற்றார் என்றும் 4 பேர் சாதாரண காயமுற்றனர் என்றும் கூறினார்.

மேலும், பிரேதம் புகை வண்டியின் இரண்டாவது பெட்டியில் இரண்டு பெஞ்சுகளுக்கிடையே கீழே இருந்தது என்றும், அதே பெட்டியின் மற்றொரு பகுதியில் 'அப்பர் பெர்த்தில்' படுகாயமுற்றவர் இருந்தார் என்றும் கூறினார். தாம் ஏற்கெனவே விசாரணை அதிகாரியால் விசாரிக்கப்பட்டதாகவும் கூறினார்.

சாட்சி, குறுக்கு விசாரணை செய்யப்படுகையில் கூறியதாவது:—

வண்டியின் என்ஜினிலிருந்து 2-வது பெட்டியில் இறந்தவரையும், படுகாயமுற்றவரையும் கண்டேன். ஆனால் இருவரும் அதே பெட்டியில் வெவ்வேறு பகுதியில் இருந்தனர். அவ்விருவரின் பெயரும் எனக்குத் தெரியாது.

கடுமையாகக் காயமுற்றவர் தம் சுயஉணர்வற்றுக் கிடந்தார். அவர் வலது பக்கத்தில், கழுத்துக்குப் பக்கத்தில் ஒரு பெருங் காயமுற்றிருந்தது. இறந்தவர் துணியால் மூடப்பட்டிருந்ததால் பிரேதத்தின் மீது நான் ஒரு காயத்தையும் பார்க்க முடியவில்லை. ஆனால், அப்பிரேதம் ஓர் இரத்தக் குட்டையிலேயே கிடந்ததை நான் கண்டேன். படுகாயமுற்றவர் படுத்திருந்த "அப்பர் பெர்த்"திலும் இரத்தம் இருந்ததைக் கண்டேன். பெட்டியில் துப்பாக்கிக் குண்டால் செய்யப்பட்ட ஒரு துவாரத்தையும் கண்டேன்.

23-வது எதிரி போலீசார் துப்பாக்கிப் பிரயோகம் செய்ததால் அவர்கள் காயமுற்றனர் என்று 'புகார் புத்தகத்'தில் எழுதினார். நான் விழுப்புரம் டி. டி. எஸ். அவர்கட்கு இது சம்பந்தமாக அறிக்கை அனுப்பினேன். பிரேதம் இருந்த பெட்டி, புகை வண்டித் தொடரிலிருந்து அகற்றப்பட்டு நிறுத்தப்பட வேண்டும் என்று கூட்டத்தினர் ஏன் கோரினர் என்று என்னால் புரிந்து கொள்ளவும் முடியவில்லை; காரணமும் தெரியவில்லை. 18-வது எதிரியாகிய தோழர் இராமதாஸ் என்பவர் பிரேதத்தையும் படுகாயமுற்றவரையும் வண்டியிலிருந்து இறக்க எனக்கு உதவி செய்தார். 23-வது எதிரி 'புகார் புத்தகத்'தில் பிற்பகல் மூன்று மணிக்கு எழுதினார்."

பிறகு அரசாங்க தரப்பு சாட்சிகளில் 14-வது சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டார்.

தோழர்கள் கேசவன், நடராசன் ஆகியோரின் சாவைப் பற்றியும், அடிஷனல் டிஸ்ட்ரிக்ட் மாஜிஸ்திரேட்டால் மாத்திரம் தான் பிரேத விசாரணை நடத்தப்படலாம் என்ற உண்மையைப் பற்றியும், சாட்சி 1, 11, 13, 14-வது எதிரிகளைக் காயங்களோடு லால்குடி அரசாங்க வைத்தியசாலையில் கண்ட உண்மையைப் பற்றியும் குறிப்பிட்டுள்ள எப். ஐ ஆர். கோர்ட்டில் தாக்கல் செய்யப்பட்டது.

துப்பாக்கிப் பிரயோகத்தின் போது 7-வது எதிரி தம் மேலே போட்டிருந்த டர்க்கி டவலும், ஒரு துப்பாக்கிக் குண்டும் கோர்ட்டில் சமர்ப்பிக்கப்பட்டன.

பிறகு மணச்சநல்லூர்போலீஸ் ஸ்டேஷனைச் சேர்ந்த தோழர் பாலராஜ் என்ற சப்-இன்ஸ்பெக்டர் விசாரிக்கப்பட்டார்.

அவர் சாட்சியம் கூறுகையில், தாம் குற்ற விசாரணை அதிகாரியால், எதிரிகளின் முந்திய நடவடிக்கைகளைப்பற்றி விசாரிப்பதற்குப் பிரத்தியேகமாக நியமிக்கப்பட்டவர் என்று கூறினார்.

இவர் கூறிய சாட்சியத்தை எதிரி தரப்பு வக்கீல் தோழர் வாசுதேவ ஆனந்தர் ஆட்சேபித்தார். பிராசிகியூஷன் தரப்பு சாட்சியம் முடிவடைவதற்குள் எதிரிகளின் முந்திய நடவடிக்கைகள் பற்றிப் பேசுவது நீதிபதியின் கருத்தை மாற்றக் கூடுமாதலால், அது ஆட்சேபனைக்குரியது என்று அவர் கூறினார்.

## சி. பி. சிற்றரசு

சுற்றுப் பிரயாணம்

| | | |
|---|---|---|
| ,, | 10: | திருப்பூண்டி |
| ,, | 12: | மோகனூர் |
| ,, | 13: | நாமக்கல் |
| ,, | 15: | வைதீஸ்வரன் கோயில் |
| ,, | 16: | டால்மியாபுரம் ஆலம்பாடி |
| ,, | 17: | ஆலம்பாடி |
| ,, | 18: | உசிலம்பட்டி |
| ,, | 19: | சமயநல்லூர் |
| ,, | 20: | பட்டிவீரனபட்டி |
| ,, | 23: | உசலூர் |
| ,, | 25: | கடையநல்லூர் |
| ,, | 27: | அக்கரைப்பக்கன் பாளையம் |
| ,, | 29: | மாயூரம் |
| நவம்பர் | 5: | சீயாழி |
| ,, | 7: | போராவூரணி |
| ,, | 8: | ஆலடிக்குளை |
| ,, | 15: | திருத்துறைப் பூண்டி |
| ,, | 23: | பெங்களூர் |
| ,, | 25: | நங்கவள்ளி |

மற்ற ஊர்களுக்கு தேதி பின்னர் அறிவிக்கப்படும்.

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன், எம். ஏ., அவர்களால், அழகிரி அச்சகத்தில் அச்சிடப்பெற்று (24, சூரிய நாராயண செட்டித் தெரு, இராயபுரம்) வெளியிடப்படுகிறது. ஆசிரியர்: சி. என். அண்ணாதுரை. எம். ஏ.